உ

கடவுள் துணை

யாப்பிலக்கணம்.

திருத்தணிகை

விசாகப்பெருமாளையரவர்கள்

இயற்றியது.

S அனவரதவிநாயகம் பிள்ளை, M. A., L. T.,

அவர்கள் பரிசோதித்தது.

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,

87, தம்புசெட்டி வீதி, சென்னை.

[2-ம் பதிப்பு]

1915

விலை அணா 2

யாப்பிலக்கணப் பதிப்புரை.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில், இச்சென்னைமா நகரில், திருத்தணிகை விசாகப்பெருமாளைய ரெனவும், சரவணப் பெருமாளைய ரெனவும் இருவர் புலவர் விளங்கினர். இவ்விருவரும் திருவாவடுதுறைக் கச்சியப்ப முனிவரிடத்திற் றமிழ்கற்ற திருத்தணிகைக் கந்தப்பையரென்னும் வீரசைவ சிகாமணியின் செல்வக்குமாரர்கள். இவர்கள் தமிழ்க்காகச் செய்த நன்மையை அளவிட்டுரைக்க முடியாது. திருக்குறள் நைடதம் பிரபுலிங்கலீலை முதலிய நூல்களுக்கு உரை செய்து வைத்ததன்றி இலக்கணத்தை விளக்கச் சில நூல்களும் இவர்கள் பெயரால் வெளிவந்திருக்கின்றன. தற்காலத்து ஜனாபிப்பிராயத்தை யொட்டி இலக்கணத்தை யிருவர் தலையிலும் ஏற்றவேண்டியிருக்கிறதே யொழிய அச்சிட்டுக்காணும் நூலகத்து இதற்கு ஆதாரம் சிறிதுமில்லை.

கி. பி. 1828-ல் வெளிப்பட்ட இலக்கணச்சுருக்க வினாவிடை யென்னும் நூல் மிக விரிந்தது. எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணியென்னும் ஐந்திலக்கணங்களையும் எடுத்துச்சொல்வது. இந்நூல் திருத்தணிகை விசாகப்பெருமாளையர் பெயரால் வெளிப்பட்டிருக்கின்றது. இந்நூற்குச் சிறப்புப்பாயிரம் "இந்நூலாசிரியர் விசாகப்பெருமாளையர்க் கிளவலாகிய சரவணப்பெருமாளையராற் சொல்லப்பட்டது" என அந்நூன் முதற்பக்கங்களிற் பொறிக்கப்பட்டுளது. ஆசிரியர் தற்சிறப்புப்பாயிரங் கூறும்பொழுதும் "அலகில் [illegible]யைத் தறைகுவ னமைந்தே" என்றனர். அணி

யிலக்கணம் அதுகாறும் தமிழிலுள்ள அணியிலக்கணங்க
ளைத் தழுவாது வடமொழிச் சந்திராலோகத்தைப் பின்பற்றி
எழுதப்பட்டபடியால் இலக்கணச்சுருக்க வினாவிடை யாசிரி
யர் வடமொழி வல்லாருதவிபெற் றப்பாகத்தை யெழுதின
ரென்பதற்கு "இதனுள் அணியிலக்கணம் புதூர் சீதாராம
சாஸ்திரியாராற் பரிசோதிக்கப்பட்டது" என்னும் வாக்கி
யம் சான்று பகரும். இதனை யெல்லாம் விசாகப்பெருமா
ளையரே வினாவிடை முழுதிற்கும் ஆசிரியரென்பதும், சர
வணப் பெருமாளையர் ஆசிரியரல்ல ரென்பதும் தெளிவாக
விளங்கும்.

இனி, சின்னாட் சென்றபின் வினாவிடைக்கண் தமிழ்
கற்பார் ஆதரம் குன்றியதுபோலும், வினாவிடை யாசிரியர்
தாமே பாலபோதவிலக்கணம் என வேறொரு நூல் செய்த
னர். இந்நூலின் ஐந்தாம் பதிப்பு கி. பி. 1870-ல் அச்சிடப்
பட்டது ஒருபிரதி கண்டேன். இப்பாலபோத விலக்கணத்து
யாப்பும் அணியும் காணப்படினும், எழுதியவர் எழுத்துஞ்
சொல்லுந்தான் எழுதியதாகத் தோன்றுகின்றது. இதற்கு
அதனுள், "இந்நூல்: எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்,
புணர்ச்சியதிகாரம், தொடர்மொழியதிகாரம் என நான்கதி
காரங்களாக வகுக்கப்படும்" என்னும் வாக்கியமே சான்று.
அன்றியும், தொடர்மொழி யதிகாரத் திறுதியில் "தொடர்
மொழி யதிகாரம் முற்றுப்பெற்றது. திருத்தணிகைக் கந்தப்
பையர் குமாரராகிய விசாகப்பெருமாளையரால் இயற்றப்பட்ட
பாலபோத விலக்கணம் முடிந்தது முற்றும்" என்று [illegible]
வாக்கியமும் இதனை நிறுத்தும். யாப்பதிகாரமும் அணி பதி

காரமும் வினாவிடையி னுள்ளபடியே வினாக்களை மட்டுந் தள்ளி அச்சிட்டுச் சேர்க்கப்பட்டன போலும்.

நாமிங்குப் பதிப்பிக்க எடுத்துக்கொண்டது இலக்கணச் சுருக்கத்துக் காணப்படும் யாப்பிலக்கண வினாவிடையே. பாலபோத விலக்கணத்தில் நூதனமாகக் காணப்படும் சில உதாரணச் செய்யுள்களும் தக்கவிடத்திற் சேர்க்கப்பட்டுள. யாப்பிலக்கணத்தில் உதாரணச் செய்யுள்கள் 77-வரை காட்டப்பட்டிருக்கின்றன.

இந்நூலாசிரியர் விளங்கியது சென்ற நூற்றாண்டிலாயினும் இவரது சரித்திரம் யாண்டும் கோத்து எழுதப்பட்டிராமை நம்மனோர்க்குப் பொதுவாகச் சரித்திரங்களிடத்துள்ள அசிரத்தையைக் காட்டும். இவ்வணியிலக்கணத்தைச் சில வாண்டுகளின் முன் தனிநூலாக வெளிப்படுத்திய தமிழ்ப் பண்டிதர் ஈக்காடு இரத்தினவேலு முதலியாரவர்கள் இந்நூலாசிரியரது பிறப்பு வரலாற்றை ஒருவாறு கூறியிருக்கின்றனர். அது வருமாறு: "திருத்தணிகைப்பதியில், வீரசைவ குலோத்பவராய்க் கல்வியறி வொழுக்கங்களிற் சிறந்து, திருவாவடுதுறை யாதீனத்துக் கச்சியப்பமுனிவர்வழியி லிலக்கிய விலக்கணங்களை யாராய்ந்த கந்தப்பையரென்பவ ரொருவ ரிருந்தனர். அவர் இல்லறமேற்கொண்டு சில்காலொழுகி மகப்பேறுடையாது மனமாழ்கி, தன் மனைவி தெய்வயானையம்மையோடுடன் பிறந்த வள்ளியம்மையையு மணந்து பின்னுஞ் சில வருடங்கள் கழித்து, இருவரி லொருவர்பாலும் புத்திரோற்பவங் கைகூடாது கவலைக்கடலு ளாழ்ந்து, தமது சீடர்

கட்குக் கல்வி பயிற்றுவதிலேயே மனத்தைச்செலுத்தி ஒருவாறு துணிவு கொண்டனர்.

"இவரிங்ஙனமிருக்க, இவர் மனைவியரிருவருந் தணிகையம்பதிக் கருகிலுள்ள ஊருணியொன்றினின்று நீர் முகந்துவரச் செல்லுகையில், அவர்கள் கட்புலனுக்குத் தோற்றிய வேங்கடமலையை நோக்கித் தணிகாசலபதியை வெறுத்தார்போல, இச்செங்கல்வராயனுக்கு நம்மீது கருணையில்லைபோலும், இனி வேங்கடத்திறைவனேனும்நமக்கு நன்மக்களையருளானோவெனச் சம்பாஷித்துச்சென்று, நம்மிடத்துக்குழந்தையுதிப்பின், திருமாலின் பெயரை யதற்களித்துமெனத் தீர்மானித்துக்கொண்டு வீட்டை யடைந்தனர். சின்னாட் சென்றபின்னர் அவ்விரு சகோதரிகளுங் கருப்பவதிகளாய்முறையே ஒவ்வொரு ஆண்மகவைப் பெற்றனர். அப்பிள்ளைகள் ஒருவர்க்கொருவர் ஒருநாளின் வித்யாசத்தாலேயே மூத்தோரிளையோரெனப்பட்டனர். அவ்விரு சிறார்க்கும் தந்தை தமது மரபின்படி விசாகன் சரவணன் என நாமகரணஞ் செய்யத் தனிக்கையில், அவர் மனைவியர் திருப்பதிமலையைக்கண்டு தங்களுட் டீர்மானித்த வகையை வெளியிட, ஐயாவர்கட்கிணங்கித் தாம் விரும்பிய நாமங்களுடன் பெருமாளென்பதைப் புணர்த்தினர். அதனால் விசாகப்பெருமாளையர் சரவணப்பெருமாளையரென வழைக்கப்பட்டனர்.

"இச்சகோதரர்களிருவரும் மிக்க ஒற்றுமை யுடையாராய்த் தமது தந்தையாரிடம் பல நூல்களைக் கற்று, பின்னர்ச் சென்னை நகரையடைந்து சஞ்சீவிராயன்பேட்டையில்வாழ்க்

திருந்த இலக்கணக்கடலாகிய இராமாநுஜ கவிராயரிடம் நன்னூன் முதலிய பன்னூல்களும் பயின்று கற்றோர் மதிக்கத்தக்க வித்துவசிகாமணிக ளாயினர்."

இவ்விருவருள் விசாகப்பெருமாளையர் நெடுங்காலம் சென்னை யூனிவர்ஸிட்டி யென்னும் சகல சாஸ்திர கல்விச்சாலையில் தமிழ்த்தலைமைப்புலமை நடாத்தினர். சரவணப்பெருமாளையர் சிலகாலம் நூல்கள் செய்துகொண்டும் மாணவர்க்குப்பாடஞ்சொல்லிக்கொண்டு மிருந்து இளமையிலேயே காலஞ்சென்றனர். பல வேதாந்த நூல்கள் செய்தவரும் சில நூல்களுக்கு விருத்தியுரை செய்தவருமாகிய ஈசூர் சச்சிதானந்த பிள்ளையென்பவர் இவரிடத்துத் தமிழ் கற்றவருளொருவர். நன்னூற்கு முதலிற் காண்டிகையுரை செய்தவர் விசாகப்பெருமாளையர் என்பதும் ஞாபகத்தில் வைக்கத்தக்கது. இது வெளிப்பட்ட பின்னர்த்தான் இவ்வாசிரியர் இராமாநுஜ கவிராயர் இராமாநுஜ காண்டிகை யெனப்படும் விருத்தியுரை யொன்று செய்து கி. பி. 1847-ல் வெளிப்படுத்தினர்போலும். ஆறுமுகநாவலர் காண்டிகையும் பின்னர் வெளிப்பட்டதுவே.

தமிழ்ப்பண்டிதர் இரத்தினவேலுமுதலியாரவர்கள் பதிப்பு அகப்படுத லருமையாய்விட்டபடியாலும், மதுரைத் தமிழ்ச் சங்கப்பதிப்பு கருநாடக வொழுங்கை யநுஸரித்திருப்பதால் தற்கால மாணவர்க்குப் பெரும்பயன் செய்யாமையாலும் இப்பதிப்பு வெளிப்படுத்தலாயிற்று. S. A. P.

யாப்பிலக்கண

உதாரணச் செய்யுள் முதற்குறிப்பு.

சீர்கள்.

ஓரசைச்சீர்.

மலர்மிசையேகி
கற்றதனாலாய

ஈரசைச்சீர்.

கே·தப்பொருளாய்

மூவசைச்சீர்.

ஆனந்தக்கூத்த
மண்ணீரனல்

நாலசைச்சீர்.

அள்ளற்பள்ளத்

தளைகள்.

தேனார்கஞ்சச்
பெரியவர்தந்நோய்
மண்ணீரனல்
அஞ்சம்போனடை

தொடைகள்.

எதுகைத்தொடை.

தகடூர்பெருஞ்
சொற்போர்புரிவ
பொன்னினன்ன
வானின்றுலக
ஆவாவென்றே
தக்கார்தகவில

மோனைத்தொடை.

கற்றனகல்வியுக்
அடல்வேண்டுமைந்

எதுகைமோனையின்றிவரும் பாட்டு.

பூத்தவேங்கை

வெண்பா.

குறள்வெண்பா.

உடையார்முன்
கண்ணுதல்காட்சி

நேரிசைவெண்பா.

கூற்றங்குமைத்த
ஏற்றான்புள்ளூர்ந்.

இன்னிசைவெண்பா.

துகடீர்பெருஞ்
கடற்குட்டம்போழ்.
மழையின்றிமாநில
காதன்மகளிர்
அங்கண்விசும்பி

சிந்தியல்வெண்பா.

அறிந்தானையேத்தி
போற்றுமின்போற்று

பஃறொடைவெண்பா.

வையகமெல்லாங்

வெண்பாவினம்.

குறள்வெண்செந்துறை.

ஆர்கலியுலகத்து

குறட்டாழிசை.

நண்ணுவார் வினை
அருவர்க்கறவரை
வண்டார்பூங்கோ

வெண்டாழிசை.

நண்பிதென்றதிய
அம்பேருண்கண்

வெண்டுறை.

படர்தருவெவ்வினை
கூற்றிருக்குமடலா

வெளிவிருத்தம்.

அங்கட்கமலத்தலர்
ஆவாவென்றேயஞ்

அகவற்பா.

நேரிசையாசிரியப்பா.

பெருந்துறையுந்து

இணைக்குறளாசிரியப்பா.

நீரின் றண்மையுங்

நிலைமண்டிலவாசிரியப்பா.

வேரல்வேலிவேர்

அடிமறிமண்டிலவாசிரியப்பா.

தீர்த்தமென்பது

அகவற்பாவினம்.

ஆசிரியத்தாழிசை.

சத்திருமாகியச்
கன் றிகுணிலாக்

ஆசிரியத்துறை.

கரைபொருகானியா
இரங்குகுயின்முழ

ஆசிரியவிருத்தம்.

விடஞ்சூழரவினிடை
கோமுனிவருக்கு
அருவருக்குமுலக
வளங்குலாவரு
கைத்தலத்தழற்க

கலிப்பா.

வண்ணக வொத்தாழிசை.

தொல்லுலகம்படுசுடிகை

அம்போதரங்க வொத்தாழிசை.

மேற்கூறியகவியில்அராகமொழித்துக் காண்க.

நேரிசையொத்தாழிசை.

மேற்கூறிய கவியில் அராகத்தையும் அம்போதரங்கத்தையுமொழித்துக் காண்க.

வெண்கலிப்பா.

சேல்செய்தமதர்வேற்

கலிவெண்பா.

சுடர்த்தொடீஇ

தரவுகொச்சகக்கலிப்பா.

அஞ்சய்போனடை

தரவிணைக்கொச்சகக் கலிப்பா.
வடிவுடைநெடுமுடி
சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.
பரூஉத்தடக்கைமத
பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.
தண்மதியேர்முகத
மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.
மணிவிளர்நெடுமுடி

கலிப்பாவினம்.
கலித்தாழிசை.
இருகூற்றுருவத்திருந்
பூண்டபறையறையப்
செல்லார்பொழிற்றில்லை
கலித்துறை.
யானுந்தோழியுமாயமு
கலிவிருத்தம்.
வேய்தலைநீடிய
கட்டளைக்கலிப்பா.
சொல்லினிரிவ
கட்டளைக்கலித்துறை.
சிலைமலிவாணுத

வஞ்சிப்பா.
குறளடிவஞ்சிப்பா
பூந்தாமரைப்போத

சிந்தடிவஞ்சிப்பா.
எறிவெண்டிரைக்கட

வஞ்சியினம்.
வஞ்சித்தாழிசை.
பிணியென்றுபெயராமே
வஞ்சித்துறை.
போரிவன்னன்
வஞ்சிவிருத்தம்.
சாந்தஞேந்தியதாழ்

மருட்பா.
புறநிலைவாழ்த்து.
தென்றலிடைபோழ்ந்த
கைக்கிளை.
திருநுதல்வேர்வரும்
வாயுறைவாழ்த்து.
பலமுறையோம்பப்
செவியறிவுறூஉ.
பல்யானைமன்னர்

நூற்பா.
எழுத்தெனப்படுவ

கூன்.
உதுக்காண், சாத்தாவு
அவற்றுள், அ இ உ எ.

உ

கடவுள்துணை.

யாப்பிலக்கணம்.

யாப்பு.

1. யாப்பென்பது யாது?

மேற் சொல்லிலக்கணத்திற் கூறிய பல சொற்களாலும் பொருட்கு இடனாகக் கற்றுவல்ல புலவரால் அணிபெறப் பாடப்படுவதாம்.

யாப்பு, பாட்டு, தூக்கு, தொடர்பு, செய்யுள் என்பன ஒருபொருட் சொற்கள்.

2. அஃது எத்தனை வகைப்படும்?

பாவும், பாவினமுமென இருவகைப்படும்.

3. இவ்விரண்டிற்கும் உறுப்பாய் வருவன யாவை?

எழுத்து - அசை - சீர் - தளை - அடி - தொடை என்னும் ஆறும் இவற்றிற்கு உறுப்பாம்.

1. எழுத்து

4. எழுத்துக்களென்பன யாவை?

மேல் எழுத்திலக்கணத்திற் கூறிய முதல், சார்பென்னும் இருவகை யெழுத்துக்களுமாம்.

செய்யுளடிக்கு எழுத்தெண்ணுங்கால் மெய்கள் எண்ணப்படாவாம்.

தளைசிதைய வருமிடத்துக் குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் அளபெடையும் தள்ளுண்டுபோம்.

2. அசை.

5. அசையென்பது யாது?

எழுத்துக்களால் ஆக்கப்பட்டுச் சீர்க்கு உறுப்பாக வருவதாம்.

6. அவ்வசை எத்தனை வகைப்படும்?

நேரசையும், நிரையசையுமென இருவகைப்படும்.

(1) நேரசை.

7. நேரசைகளென்பன யாவை?

குறிலேனும் நெடிலேனுந் தனித்து வரினும், அல்லது ஒற்றடுத்து வரினும் நேரசைகளாம்.

உதாரணம். ஆ - ழி.

இம்மொழியில், நெடிலுங் குறிலுந் தனித்து நேரசையாயின.

சொல் - வான்.

இம்மொழியில், குறிலும் நெடிலும் ஒற்றடுத்து நேரசையாயின.

அ - அவன் என்பதுபோல விட்டிசைத்தவழி யல்லது தனிக்குறில் மொழிக்கு முதலில் நேரசை யாகாது.

(2) நிரையசை.

8. நிரையசைகளென்பன யாவை?

குறிலிணையேனுங் குறினெடிலேனுந் தனித்து வரி னும், அல்லது ஒற்றடுத்து வரினும் நிரையசைகளாம்.

உ-ம். அணி - அணில்; குரா - குரால் எனவரும்.

3. சீர்.

9. சீரென்பது யாது?

அவ்வசை சிறுபான்மை தனித்தும் பெரும்பாலும் இரண்டு முதலியவாகத் தொடர்ந்தும் வருவதாம்.

10. அச் சீர் எத்தனை வகைப்படும்?

ஓரசைச்சீரும் ஈரசைச்சீரும் மூவசைச்சீரும் நாலசைச் சீரும் என நான்கு வகைப்படும்.

(1) ஓரசைச்சீர்.

11. ஓரசைச்சீர்களென்பன யாவை?

தனித்துவரும் நேரசையும் நிரையசையுமாகிய இரண்டு மாம்.

இவற்றிற்கு உதாரண வாய்பாடு:

நேர் - நாள். நிரை - மலர்.

இவை பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றிலுஞ் சிறு பான்மை ஒழிந்தவற்றுள்ளும் வரும்.

உ-ம் "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்." (1)

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅ ரெனின்." (2)

இக்குறள் வெண்பாக்களின் இறுதியில், வார் - நாள், ரெனின் - மலர் என ஓரசைச் சீரிரண்டும் வந்தன காண்க.

(2) ஈரசைச்சீர். அகவற்குரிய.

12. ஈரசைச்சீர்க ளென்பன யாவை?

நேர்நேர் - நிரைநேர் - நிரைநிரை-நேர்நிரை என் இரண்டசை கூடிவருதலாலாகிய சீர் நான்குமாம்.

இவற்றிற்கு உதாரண வாய்பாடு;

நேர்நேர் - தேமா. நிரைநேர் - புளிமா.

நிரைநிரை - கருவிளம், நேர்நிரை - கூவிளம்.

இவை அகவற்கே உரியவாய் இயற்சீரெனவும், அகவற்சீரெனவும் பெயர் பெறும்.

உ-ம். "வேதப் பொருளாய் விளங்கிய சங்கரன்
பாதத் திணைமனம் பற்றுவோர்
போதத் தொளிர்நலம் பொருந்திவாழ் குவரே." (3)

இவ்வகவலுள், வேதப் - தேமா, பொருளாய் - புளிமா, விளங்கிய - கருவிளம், சங்கரன் - கூவிளம் என ஈரசைச்சீர் நான்கும் வந்தன காண்க. பிறவும் அன்ன.

(3) மூவசைச்சீர்.

13. மூவசைச்சீர்களென்பன யாவை?

மேற் சொல்லப்பட்ட நேர்நேர் முதலிய நான்கின் இறுதியிலும் நேரசையும் நிரையசையுந் தனித்தனி கூடி வருதலாலாகிய எட்டுச்சீர்களுமாம்.

இவற்றிற்கு உதாரண வாய்பாடு:

நேர்நேர்நேர் - தேமாங்காய்.
நிரைநேர்நேர் - புளிமாங்காய்.
நிரைநிரைநேர் - கருவிளங்காய்.
நேர்நிரைநேர் - கூவிளங்காய்.
நேர்நேர்நிரை - தேமாங்கனி.
நிரைநேர்நிரை - புளிமாங்கனி.
நிரைநிரைநிரை - கருவிளங்கனி.
நேர்நிரைநிரை - கூவிளங்கனி.

இவ்வெட்டும் உரிச்சீரெனவும், இவற்றுட் காய்ச்சீர் நான்கும் வெண்பாவிற்கு உரியவாய் வெண்சீரெனவும், கனிச்சீர் நான்கும் வஞ்சிப்பாவிற்கு உரியவாய் வஞ்சிச்சீரெனவும் பெயர் பெறும்.

உ-ம். "ஆனந்தக் கூத்த னடிக்கன்பு செய்மனனே
யீனந் தனையொழிவா யின்று." (4)

இக்குறள் வெண்பாவினுள், ஆநந்தக் - தேமாங்காய், கூத்த - தேமா, னடிக்கன்பு - புளிமாங்காய், செய்மனனே

கூவிளங்காய், யினந் - தேமா, தனையொழிவா - கருவிளங் காய், யின்று - காசு எனக் காய்ச்சீர் நான்கும் வந்தன காண்க.

"மண்ணீரனல் வளிவானொடு
வெண்ணீர்மதி வெங்கதிருயி
ரெண்ணீடுரு வியைபசுபதி
நாளும்
என்மன மிடங்கொண் டுறைதலால்
வன்மனக் கொடியர்சொற் கிலேமயங் குதலே." (5)

இவ்வஞ்சிப்பாவினுள், மண்ணீரனல் - தேமாங்கனி, வளிவானொடு - புளிமாங்கனி, வெண்ணீர்மதி-தேமாங்கனி, வெங்கதிருயி - கூவிளங்கனி, ரெண்ணீடுரு - தேமாங்கனி, வியைபசுபதி - கருவிளங்கனி எனக் கனிச்சீர் நான்கும் வந்தன கண்க.

(4) நாலசைச்சீர்.

14. நாலசைச்சீர்களென்பன யாவை?

அம் மூவசைச்சீர் எட்டன் இறுதியிலும் நேரசையும் நிரையசையுந் தனித்தனி யடுத்து வருதலாலாகிய சீர் பதினாறுமாம்.

இவற்றிற்கு உதாரண வாய்பாடு:

தேமாந்தண்பூ, புளிமாந்தண்பூ.

கருவிளந்தண்பூ, கூவிளந்தண்பூ.

தேமாநறும்பூ, புளிமாநறும்பூ.

கருவிளநறும்பூ, கூவிளநறும்பூ.

தேமாந்தண்ணிழல், கூவிளந்தண்ணிழல்.
கருவிளந்தண்ணிழல், கூவிளந்தண்ணிழல்.
தேமாநறுநிழல், புளிமாநறுநிழல்.
கருவிளநறுநிழல், கூவிளநறுநிழல்.

இவை வெண்பாவினுள் வருவனவல்ல.

கலியினுள்ளும் அகவலுள்ளும் பெரும்பாலுங் குற்றியலுகரம் வந்த விடத்தன்றி வாரா.

வஞ்சிப்பாவினுட் பெரும்பாலும் வாவும் ஓடியுள் இரண்டு நாலசைச்சீர் கண்ணுற்று நிற்கவும் பெறும்.

உ-ம். "அள்ளற்பள்ளத் தகன்சோணாட்டு
வேங்கைவாயின் வியங்குன்றூரன்." (6)

இவ் வஞ்சியடியில் இரண்டு நாலசைச்சீர் வந்தன காண்க.

4. தளை.

15. தளையென்பது யாது?

நின்றசீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை ஒன்றியேனும் ஒன்றாதேனுங் கூடிநிற்பதாம்.

நேர்முன் நேரும், நிரைமுன் நிரையும் வருதல் ஒன்றி வருதலாம்.

அவ்வாறன்றி நேர்முன் நிரையும், நிரைமுன் நேரும் வருதல் ஒன்றாது வருதலாம்.

16. அத்தளை எத்தனை வகைப்படும்?

நேரொன் றாசிரியத்தளை - நிரையொன் றாசிரியத்தளை - வெண்சீர் வெண்டளை - இயற்சீர் வெண்டளை - ஒன்றிய வஞ்சித்தளை - ஒன்றா வஞ்சித்தளை - கலித்தளை என எழுவகைப் படும்.

17. அவை யெவ்வாறு வருவனவாம்?

(1) நேரொன் றாசிரியத்தளை.

மாமுன் நேர்வருவது. நாள்முன் நேர்வருவதும் அது.

(2) நிரையொன் றாசிரியத்தளை.

விளமுன் நிரைவருவது. மலர்முன் நிரைவருவதும் அது.

(3) வெண்சீர் வெண்டளை.

காய்முன் நேர் வருவது. பூமுன் நேர்வருவதும் அது.

(4) இயற்சீர் வெண்டளை.

மாமுன் நிரையும் விளமுன் நேரும் வருவன. நாள் முன் நிரைவருவதும் மலர்முன் நேர் வருவதும் அது.

(5) ஒன்றிய வஞ்சித்தளை.

கனிமுன் நிரை வருவது. நிழல்முன் நிரை வருவதும் அது.

(6) ஒன்றா வஞ்சித்தளை.

கனிமுன் நேர் வருவது. நிழல் முன் நேர் வருவதும் அது.

(7) கலித்தளை.

காய்முன் நிரைவருவது. பூமுன் நிரைவருவதும் அது.

உ-ம். "தேனூர் கஞ்சச் செம்ம லாதி
வானோர் மாதர் மங்கலங் களத்திடை
வலியோடு நிலைபெற மலிபெருங் கருணையி
னலைதரு மிருள்விட மணிமிடற் றிருத்துந்
தில்லையுட் சிவபிரான் றிருவடி
யொல்லையிற் பரசுநர்க் குயர்கதி யெளிதே." (7)

இவ்வகவலுள், தேனூர் + கஞ் என மாமுன் நேர் வருதலால் இது நேரொன் றாசிரியத்தளையாம். மங்கலங்+ களத் என விளமுன் நிரை வருதலால் இது நிரையொன் றாசிரியத்தளையாம்.

"பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ள
மெரியி னிழுதாவ ரென்க—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்." (8)

இந் நேரிசைவெண்பாவினுள், பெரியவர்தந் + நோய் எனக் காய் முன் நேர் வருதலால் இது வெண்சீர் வெண்டளையாம். நோய்போற் + பிறர் என மா முன் நிரை வருதலால் இது இயற்சீர் வெண்டளையாம். பிறவும் அன்ன.

"மண்ணீரனல் வளிவானொடு
வெண்ணீர் மதி.........." (5)

என்னும் வஞ்சிப்பாவினுள், மண்ணீரனல் + வளி எனக் கனிமுன் நிரை வருதலால் இது ஒன்றிய வஞ்சித்தளையாம். வளிவானொடு + வெண் எனக் கனிமுன் நேர் வருதலால் இது ஒன்றா வஞ்சித்தளையாம். பிறவும் அன்ன.

"அஞ்சம்போ னடையுமையா ளகங்களிப்பச் சார்பாவ
நெஞ்சஞ்சேர் தருமன்பி னெறிமுனிவர் காங்குவிப்ப
விஞ்சுஞ்சீர்த் தனித்தில்லை வியன்பொதுவி னடமாடுங்
கஞ்சந்தாழ் திருவடிகள் கருதிமட னொழிநெஞ்சே." (9)

என்னும் இக் கொச்சகக்கலிப்பாவினுள், அஞ்சம்போ + னடை எனக் காய்முன் நிரை வருதலால் இது கலித்தளை யாம். பிறவும் அன்ன.

5. அடி.

18. அடி யென்பது யாது?

மேற்சொல்லப்பட்ட தளைகள் ஒன்றும் பலவும் அடுத்து வருவதாம்.

19. அவ்வடி எத்தனை வகைப்படும்?

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும்.

20. அவை யெவ்வாறு வருவனவாம்?

(1) குறளடி இருசீரான் வருவது. (2) சிந்தடி முச்சீரான் வருவது. (3) அளவடி அல்லது நேரடி நாற்சீரான் வருவது. (4) நெடிலடி ஐஞ்சீரான் வருவது. (5) கழிநெடிலடி ஐந்தின் மேற்பட்ட சீரான் வருவனவெல்லாம். இவற்றிற்கு இலக்கியம் பின் பாவும் இனமுங் கூறும்வழிக் காண்க.

6. தொடை.

21. தொடை யென்பது யாது?

பல அடிகளிலேனும் பல சீர்களிலேனும் எழுத்துக்கள் ஒன்றி வருவதாம்.

22. அத்தொடை எத்தனை வகைப்படும்?

எதுகைத் தொடையும் மோனைத்தொடையுமென இரு வகைப்படும்.

(1) எதுகைத்தொடை.

23. எதுகைத் தொடையென்பது யாது?

அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்ப இரண்டா மெழுத்து ஒன்றிவருவது எதுகைத் தொடையாம்.

உ-ம். "துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்காற் போல வரும்." (10)

இவ்வின்னிசை வெண்பாவினுள் இரண்டாமெழுத்தொன்றி வருதல் காண்க. அன்றியும்,

"சொற்போர் புரிவர் நான்மறையா
றங்க முணர்ந்த தொழுகுலத்தோர்
விற்போர் புரிவர் நெடியசிலை
யிராம னனைய விறல்வேந்தர்
பொற்போர் புரிவர் பிறர்பொருணந்
தடபோற் பேணிப் புரிவணிகர்
நெற்போற் புரிவ ரக்கரில்
வேளாண் குலத்து நெறியினரே." (11)

என மூன்றுமெழுத்து முதலியன ஒத்து வருதலுங் கொள்க. ஓரோவிடத்து ஓரடியுள்ளுஞ் சீர்களின் இரண்டா மெழுத்து ஒன்றி,

"பொன்னி னன்ன பொறிசுணங் கேந்தி." (12)

என வருதலும் உண்டு.

சிறுபான்மை வருக்கவெழுத்தும், நெட்டெழுத்தும், இனவெழுத்தும், பிறவும் எதுகையாக வரப்பெறும்.

உ-ம். "வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று." (13)

இது வருக்கவெதுகை.

"ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்." (14)

இது நெடிலெதுகை.

"தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்." (15)

இது வல்லினவெதுகை.

(2) மோனைத்தொடை.

24. மோனைத்தொடை யென்பது யாது?

முதற்சீரின் முதலெழுத்தோடு பின்வருஞ் சீர்களில் ஒன்றனுள்ளேனும் பலவற்றினுள்ளேனு முதலெழுத்து ஒன்றிவருவது மோனைத்தொடையாம்.

உ-ம். "கற்றள கல்வியுந் திருவு மாற்றலுந்
தற்றெறு மறலியைத் தடுப்ப வல்லவா
முற்றொருங் குணர்பசு பதியை முன்னுறா
துற்றநா ளொழித்திடு முணர்வி லிக்கரோ." (16)

இச் செய்யுளின் முதலடியில் ககரமும், இரண்டாமடியில் தகரமும், மூன்றாமடியில் முகரமும், நாலாமடியில் உகரமும் மோனையாக வந்தன. அன்றியும்,

அ-ஆ-ஐ-ஔ

என்னும் இந்நான்கும் ஒன்றற்கொன்று மோனையாம்.

இ-ஈ-எ-ஏ

என்னும் இந்நான்கும் ஒன்றற்கொன்று மோனையாம்.

உ-ஊ-ஒ-ஓ

என்னும் இந்நான்கும் ஒன்றற்கொன்று மோனையாம்.

ஞ-ந வும், ச-த வும், ம-வ வும்

ஒன்றற்கொன்று மோனையாம்.

உ-ம். "அடல்வேண்டு மைந்தின் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு." (17)

இதன் முதலடியில் அகரத்திற்கு ஐகாரம் மோனையாயிற்று. மோனை அனு என்பன ஒருபொருட் சொற்கள்.

25. எதுகை மோனையின்றி வரும் பாட்டுக்களும் உளவோ?

அவ்வாறு வரும் பாட்டுக்களுஞ் சில வுளவாம்.

உ-ம். "பூத்தவேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாட
னன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே." (18)

என வரும்.

பா.

26. பா என்பது யாது?

இரண்டு முதலிய அடிகளால் ஆக்கப்பட்டு வெண்பா முதலிய பெயர்பெற்று வருவதாம்.

27. அப்பாவானது எத்தனை வகைப்படும்?

வெண்பாவும் அகவற்பாவும் கலிப்பாவும் வஞ்சிப்பாவும் ஆகிய நான்கனோடு, மருட்பா நூற்பா என்னும் இரண்டுங் கூடி அறுவகைப்படும்.

இவற்றுள் முன் நான்குமே சிறப்புடையவாம்.

பாவினம்.

28. அந் நான்கு பாவிற்கும் வரும் இனங்கள் யாவை?

தாழிசை, துறை, விருத்தமென ஒவ்வொன்றற்கும் மும்மூன்றாம்.

வெண்பா.

29. வெண்பாவிற்கு இலக்கணமென்னை?

ஈற்றடி முச்சீரடியாகவும், ஏனையடி நாற்சீரடியாகவும் பெற்று, காய்ச்சீரும் அகவற்சீரும் வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையுங்கொண்டு, மற்றைச் சீருந் தளையும் பெறாது, காசு - பிறப்பு - நாள் - மலர் என்னும் வாய்ப்பாட்டான் முடிவது பொதுவிலக்கணமாம்.

30. அவ்வெண்பா எத்தனை வகைப்படும்?

குறள்வெண்பா - நேரிசைவெண்பா-இன்னிசைவெண்பா - சிந்தியல்வெண்பா - பஃறொடைவெண்பா என ஐந்து வகைப்படும்.

1. குறள்வெண்பா.

31. குறள்வெண்பா எவ்வாறு வரும்?

இரண்டடியாய் ஒருவிகற்பத்தாலேனும் இருவிகற்பத்தாலேனும் வரும்.

(1) ஒருவிகற்பக்குறள் வெண்பா.

உ-ம். "உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்." (19)

இது ஒரு விகற்பக் குறள்வெண்பா. மலரென முடிந்தது.

(2) இருவிகற்பக்குறள் வெண்பா.

உ-ம். "கண்ணுதல் காட்சி கிடைத்த விழிக்கில்லை
வெல்கூற்றின் றேற்றந் கொளல்." (20)

இது இருவிகற்பக்குறள் வெண்பா.

2. நேரிசைவெண்பா.

32. நேரிசைவெண்பா எவ்வாறு வரும்?

நான்கடியாய் இரண்டாமடி யிறுதிச்சீர் தனிச்சொல்லாய்வர, அடிமுழுதும் ஒரெதுகையாகவேனும் முன்னிரண்டும் ஒரெதுகையும் பின்னிரண்டும் மற்றோரெதுகையுமாகவேனும் வரும்.

(1) ஒருவிகற்ப நேரிசைவெண்பா.

உ-ம். "கூற்றங் குமைத்த குரைகழற்காற் கும்பிட்டுத்
தோற்றந் துடைத்தேந் துடைத்தேமாற்—சீற்றஞ்செய்
பேற்றினன் றில்லை யிடத்தினா னென்னினியாம்
போற்றினா னல்கும் பொருள்." (21)

இது ஒருவிகற்ப நேரிசைவெண்பா.

(2) இருவிகற்ப நேரிசைவெண்பா.

"ஏற்றான்புள் ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்பிடந்தா
னீற்றா னிழனணி வண்ணத்தான்—கூற்றொருபான்
மங்கையான் பூமகளான் வார்சடையா னீண்முடியான்
கங்கையா னீள்கழலான் காப்பு." (22)

இது இருவிகற்ப நேரிசைவெண்பா. காசு என்னும் வாய்பாட்டான் முடிந்தது.

3. இன்னிசை வெண்பா.

33. இன்னிசை வெண்பா எவ்வாறு வரும்?

ஒரு விகற்பத்தானேலும் பல விகற்பத்தானேனும் நான் கடியாய்த் தனிச்சொல்லின்றி வரும்.

(1) ஒருவிகற்ப இன்னிசை வெண்பா.

"துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்காற் போல வரும்." (10

இது தனிச்சொல்லின்றி ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

(2) பலவிகற்ப இன்னிசை வெண்பா.

"கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமி
றவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டங்
கற்றான் கடந்து விடும்." (23)

இது தனிச்சொல்லின்றிப் பல விகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பா. அன்றியும்,

"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை—மழையுந்
தவமிலா ரில்வழி யில்லைத்—தவமு
மரசிய லில்வழி யில்லை—யரசனு
மில்வாழ்வா ரில்வழி யில்." (24)

என அடிதோறுந் தனிச்சொற் பெற்று வருவதும்,

"காந்தன் மகளிர் கலக்கக் கலக்குண்டு
பேதுற்றார் நெஞ்சம் பிழைத்தகன்றார் நன்னெஞ்சம்
போதம் படரும் புலியூரே—தாதுண்டு
வண்டுறங்கு நீள்சடையோன் வைப்பு." (25)

என மூன்றாமடியிறுதி தனிச்சொற் பெற்றுவருவதும்,

"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்." (26)

என இரண்டாமடி யிறுதி தனிச்சொற் பெற்று மூன்று விகற்பத்தான் வருவதும், பிறவாறு நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு வருவனவும் இன்னிசை வெண்பாவாம்.

4. சிந்தியல் வெண்பா.

34. சிந்தியல்வெண்பா எவ்வாறு வரும்?

மூன்றடியாய் நேரிசை வெண்பாவைப்போல வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பாவென்றும், இன்னிசை வெண்பாவைப்போல வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா வென்றும் பெயர்பெற்று வரும்.

(1) நேரிசைச் சிந்தியல் வெண்பா.

உ-ம். "அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
செறிந்தார்க்குச் செவ்வனுரைப்பச்—சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு." (27)

இது நேரிசைச் சிந்தியல் வெண்பா.

(2) இன்னிசைச் சிந்தியல்வெண்பா.

"போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றங் குமைக்க வருமுன் னமரங்கா
ளேற்றுகந்தான் பொற்று ளிணை." (28)

இஃது இன்னிசைச் சிந்தியல்வெண்பா.

5. பஃறொடை வெண்பா.

35. பஃறொடை வெண்பா எவ்வாறு வரும்?

நான்கடியின் மிக்க பலவடிகளைப் பெற்றுவரும்.

உ-ம். "வையக மெல்லாங் கழனியா வையகத்துட்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் செய்யகத்துள்
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்

சாரே யங்காட்டிற் றலையூர்கள் சாரட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
யானேற்றான் கச்சி யகம்." (29)

இது ஏழடிப் பலவிகற்பப் பஃறொடை வெண்பா.

வெண்பாவினம்.

36. குறள் வெண்பாவிற்கு இனம் யாவை?

குறள்வெண் செந்துறையுங் குறட்டாழிசையும் இனமாம்.

(1) குறள்வெண்செந்துறை.

37. குறள்வெண்செந்துறை எவ்வாறு வரும்?

விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடையதாகி எனைத்துச் சீரானும் அளவொத்த இரண்டடியாய் வரும்.

உ-ம். "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை." (30)

(2) குறட்டாழிசை.

38. குறட்டாழிசை எவ்வாறு வரும்?

நாற்சீரின் மிக்க பல சீரான் வரும் அடி இரண்டாய் ஈற்றடி குறைந்துவருவனவும், விழுமிய பொருளும் ஒழுகிய வோசையு மின்றிக் குறள்வெண்செந்துறையிற் சிதைந்து வருவனவும், வேற்றுத்தளை விரவிய குறள்வெண்பாவுமென மூன்றுவகைப்பட்டு வரும்.

உ-ம். "நண்ணு வார்வினை நைய நாடொறு நற்ற வர்க்கர சாய ஞான
கண்ணி ணையடியே யடைவார்கள் கற்றவரே." (31) [நற்

எனவும்,

"அறவர்க் கறவரைப் பெற்றங் கவர்தி
மறுவறு பத்தினிபோல வையிரே." (32)

எனவும்,

"வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி." (33)

எனவும் வரும்.

1. வெண்டாழிசை.

39. வெண்பாவினம் மூன்றனுள் வெண்டாழிசை எவ்வாறு வரும்?

மூன்றடியாய் முதலிரண்டடியும் நாற்சீரும் ஈற்றடி யொன்றும் வெண்பாவைப்போல முச்சீரும் முடிவுபெற்று வேற்றுத்தளை விரவி வருவனவும், சிந்தியல்வெண்பா ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவனவுமென இருவகைப்பட்டு வரும்.

உ-ம். "நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யா
ரன்பு வேண்டு பவர்." (34)

இது மூன்றடியால் வந்த வெண்டாழிசை.

"அம்பேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
கொம்பே றடையான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வம்பே பிறந்து விடல்.

வாணேருண் கண்ணார்க் கழிக்க மடநெஞ்சே
நீணாகம் பூண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வீணே யிறந்து விடல்.

கோளாருண் கண்ணார்க் கழிக்க மடநெஞ்சே
யாளாக வாண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வாளா விறந்து விடல்." (35)

இது சிந்தியல்வெண்பா ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்த வெள்ளொத்தாழிசை.

2. வெண்டுறை.

40. வெண்டுறை எவ்வாறு வரும்?

மூன்றடிமுதல் ஏழடி யிறுகப் பின்பு நின்ற சிலவடிகளிற் சிலசீர் குறைந்து வரும். இவற்றுள் எல்லா அடியும் ஓரோசையாய் வருவனவன்றியு முன்பிற் சில அடிகளோரோசையாயும் பின்பிற் சிலவடிகள் மற்றோரோசையாயும் வருதலுமுண்டு.

உ-ம். "படர்தருவெவ் வினைத்தொடர்பாற் பவத்தொடர்ப்ப
பவத்தொடர்பாற் படரா கிற்கும்
விடலரும்வெவ் வினைத்தொடர்பவ் வினைத்தொடர்புக்
கழிவுண்டோ வினையேற் கம்மா
விடர்பெரிது முடையேன்மற் றென்செய்கே னென்செய்கே
னடலரவ மரைக்கசைத்த வடிகேளோ வடிகேளோ." (36)

இது நான்கடியாய்ப் பின் இரண்டும் இருசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

"கூற்றிருக்கு மடலாழிக் குரிசின்முத லோரிறைஞ்சக்
கொழுந்தேன் பில்கி
யூற்றிருக்குந் தில்லைவனத் தசும்பிருக்கும் பசும்பொன் மன்றத்
தொருதா ளூன்றி
வண்டோ டச்சுடர் மகுடமா டப்பிறைத்
தண்டமா டப்புலித் தோலுமா டப்பகி
ரண்டமா டக்குலைந் தகிலமா டக்கருங்
கொண்டலோ டுங்குழற் கோதையோ டுஞ்சறைக்
கண்டனா டுந்திரங் காண்மினோ காண்மினோ." (37)

இது எழடி வேற்றொலி வெண்டுறை.

3. வெளி விருத்தம்.

41. வெளிவிருத்தம் எவ்வாறு வரும்?

மூன்றடியினாலேனும் நான்கடியினாலேனும் முற்றுப் பெற்று அடிதோறும் இறுதியில் ஒரு சொல்லையே தனிச் சொல்லாகக் கொண்டுவரும்.

உ-ம். "அங்கட் கமலத் தலர்கமல மேயீரு நீரேபோலுந்
வெங்கட் சுடிகை விடவரவின் மேயீரு நீரேபோலுந்
திங்கட் சடையீருந் தில்லைவனத் துள்ளீரே நீரேபோலும்."

இது மூன்றடியால் வந்த வெளிவிருத்தம்.

"ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா ரொருசாரா
ரேகீர் நாகீ ரென்செய்து மென்றா ரொருசாரார்." (39)

இது நான்கடியால் வந்த வெளிவிருத்தம்.

அகவற்பா.

42. அகவற்பாவின் இலக்கணம் யாது?

நாற்சீரான் வரும் அளவடியதாகியும், இயற்சீர் பயின்றும், அயற்சீர் விரவியும், தன்தளை தழுவியும், பிறதளை மயங்கியும், கருவிளங்கனி கூவிளங்கனி யென்னும் இருசீருங் கலவாது மூன்று முதலிய பல அடிகளால் வருவது அகவற்பா அனைத்திற்கும் பொதுவிலக்கணமாம்.

43. அகவற்பா எத்தனை வகைப்படும்?

நேரிசை யாசிரியப்பாவும், இணைக்குற ளாசிரியப்பாவும், நிலைமண்டில வாசிரியப்பாவும், அடிமறிமண்டில வாசிரியப்பாவுமென நான்கு வகைப்படும்.

அகவல், ஆசிரியம் ஒருபொருட் சொற்கள்.

1. நேரிசை யாசிரியப்பா.

44. அந்நான்கனுள் நேரிசை யாசிரியப்பா எவ்வாறு வரும்?

ஈற்றயலடி முச்சீரடியும் மற்றை அடிகளெல்லாம் நாற்சீரடிகளுமாகப் பெற்றுவரும்.

உ-ம். "பெருந்துறை புகுந்த பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசக லல்குலேயத் தோளிடத் தவனே." (40)

என வரும்.

2. இணைக்குற ளாசிரியப்பா.

45. இணைக்குற ளாசிரியப்பா எவ்வாறு வரும்?

ஈற்றடியும் முதலடியும் ஒத்து நடுவடிகளில் ஒன்றும் பலவும் ஒருசீரும் பலசீருங் குறைந்துவரும்.

உ-ம். "நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து
தீரத் தீருஞ்
சார னுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே." (41)

என வரும்.

3. நிலைமண்டில வாசிரியப்பா.

46. நிலைமண்டில வாசிரியப்பா எவ்வாறு வரும்?

எல்லா அடியும் அளவொத்த நாற்சீரடிகளாகப் பெற்று வரும்.

உ-ம். "வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே." (42)

என வரும்.

4. அடிமறி மண்டில வாசிரியப்பா.

47. அடிமறி மண்டில வாசிரியப்பா எவ்வாறு வரும்?

எல்லா அடியும் அளவொத்து எவ்வடியை முதலடி யிறுதியாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது நிற்பக் கொண்டுவரும்.

உ-ம். "நீர்த்த மென்பது சிவகங் கையே
யேத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன திருவே." (43)

என வரும்.

அகவற்பாவினம்.

1. ஆசிரியத்தாழிசை.

48. அகவற்பாவினம் மூன்றனுள் ஆசிரியத்தாழிசை எவ்வாறு வரும்?

எனைத்துச் சீரானுந் தம்முள் அளவொத்த மூன்றடிய தாய்த் தனித்தேனும் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியே னும் வரும்.

உ-ம். "சத்தமு மாகியச் சத்தத் தாற்பெறு
மத்தமு மாகவி னனந்தன் கண்களே
யுத்தம னேக்தெழுத் திருவங் காண்பனே." (44)

இது தனித்துவந்த ஆசிரியத்தாழிசை.

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ.

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லைநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ." (45)

இது ஒரு பொருள்மேல் மூன்றடுக்கிவந்த ஆசிரியத் தாழிசை.

2, ஆசிரியத்துறை.

49. ஆசிரியத்துறை எவ்வாறு வரும்?

எனைத்துச்சீரானும் வருமடி நான்குடையதாய் ஈற்றயலடி குறைந்தேனும், முதலடியும் மூன்றாமடியுங் குறைந்தேனும் வரும். அவ்வாறு வருமிடத்து இடைமடங்கியும் மடங்காதும் வரும்.

உ-ம். "கரைபொரு கானி யாற்றங் கல்லதரெம் முள்ளி வருவீராயி
னரையிருள் யாமத் தடுபுலியே றஞ்சி யகன்று போக
நரையுரு மேறுநுங் கைவே லஞ்சு நும்மை
வரையர மங்கையர் வௌவுத லஞ்சுதும் வாரலையோ." (46)

இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்துவந்த ஆசிரியத் துறை.

"இரங்கு குயின் முழவா வின்னிசையாழ் தேனா
வரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனி
லரங்க மணிபொழிலா வாடுமாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்த திளவேனில்."

இது நான்கடியதாய் இடையிடை குறைந்து இடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை.

3. ஆசிரியவிருத்தம்.

50. ஆசிரியவிருத்தம் எவ்வாறு வரும்?

அளவொத்த கழிநெடிலடி நான்கினால் வரும்.

(1) அறுசீர்.

உ-ம். "விடஞ்சூ ழரவி னிடைநுடங்க
மினல்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன்
கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம்
வடிக்கண் ணீல மலர்தாந்தாம்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா
மென்னுந் தன்மைத் தண்ணுமையே." (48)

இது அறுசீர்க் கழிநெடி லடியால் வந்த ஆசிரியவிருத்தம்.

(2) எழுசீர்.

"கோமுனிவ ருக்குமரி தாய்முது மறைப்பனுவல்
கூறிய பரப்பி ரமமா
மோமெனு மெழுத்தின்வடி வாய்நட னவிற்றுபுலி
யூரன்மகு டச்ச டிலமேன்
மாமதிபி ளைத்தனது சோடெனவெ டுப்பமத
மாமுகன் முகக்கைதொடவத்
தூமதிப ணிப்பகையெ னுவரா நதிப்புகவொர்
தோணியென விட்ட கனுமே." (49)

இது எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

(3) எண்சீர்.

"அருவருக்கு முலகவாழ் வடங்க நீத்தோர்க்
  கானந்தப் பெருவாழ்வா யாடல் காட்ட
மருவருக்கன் மதிவளிசான் யமானன் றீநீர்
  மண்ணெனுமெண் வகையுறுப்பின் வடிவு கொண்ட
வொருவனுக்கு மொருத்திக்கு முருவொன் றுலவ்
  வுருவையிங் கொருத்தனென்கோ வொருத்தி யென்கோ
விருவருக்கு முரித்தாக வொருவ ரென்றே
  ரியற்சொலில தெனின்யான்மற் றென்சொல் கேனே." (50)

இது எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

(4) ஒன்பதின்சீர்.

"வளங்கு லாவரு மணங்க ணர்விழி
  மயக்கி லேமுலை முயக்கி லேவிழு மாந்தர்கான்
களங்கு லாமுட லிறந்து போயிடு
  காடு சேர்முனம் வீடு சேர்வகை கேண்மினோ
துளங்கு நீள்கழ றழங்க வாடல்செய்
  சோதி யானணி பூதி யானுமை பாதியான்
விளங்கு சேவடி யுளங்கொ ளீரேமன்
  விடுத்த பாசமு மடுத்த பாசமும் விலக்குமே." (51)

இது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

(5) ஒன்பதின் மிக்கசீர்.

"கைத்த லத்த ழற்க ணிச்சி வைத்தி டப்பு றத்தொ ருத்தி
  கட்க டைப்ப டைக்கி ளைத்த திறலோரா
முத்த லைப்ப டைக்க ரத்தெ மத்தர் சிற்ச பைக்கு ணிற்கு
  முக்க ணக்க ருக்கொ ருத்தர் மொழியாரோ

நித்தி லத்தி னைப்ப தித்த கச்ச றத்த டிக்க ணத்து
    நிற்கு மற்பு தத்த னத்தி னிடையேவே
ளத்தி ரத்தி னைத்தொ டுத்து விட்டு கெட்ட யிற்க ணித்தி
    லக்க ணுற்றி டச்செய் விச்சு மதுதானே." (52)

இது ஒன்பதின் மிக்கசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கலிப்பா.

51. கலிப்பாவிற்கு இலக்கண மென்னை?

வெண்சீர்மிகப் பெற்று மாச்சீரும் விளங்கனிச்சீரும் பெறாது பிறசீர்களுஞ் சிறுபான்மை கலந்து கலித்தளையும் அயற்றளையுந் தழுவி, தரவு - தாழிசை - அராகம் - அம்போதரங்கம்- தனிச்சொல்-சுரிதகம் என்னும் ஆறு உறுப்பினுள் ஏற்பனகொண்டு நாற்சீரடியால் வருவது கலிப்பா அனைத்திற்கும் பொதுவிலக்கணமாம்.

52. அக் கலிப்பா எத்தனை வகைப்படும்?

ஒத்தாழிசைக் கலிப்பாவும், வெண்கலிப்பாவும், கொச்சகக் கலிப்பாவுமென மூன்று வகைப்படும்.

1. ஒத்தாழிசைக் கலிப்பா.

53. ஒத்தாழிசைக் கலிப்பா எத்தனை வகைப்படும்? அவை எவ்வாறு வரும்?

வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா - அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா - நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா என் மூன்று வகைப்படும்.

(1) வண்ணக ஒத்தாழிசை.

அவற்றுள், வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா ஒரு தரவு - மூன்றுதாழிசை - அராகம் - அம்போதரங்கம் - தனிச்சொல் - சுரிதகம் என்னும் இவ்வாறுறுப்பும் ஒன்றன்பின் ஒன்றுறக் கொண்டுவரும். அராகமெனினும் வண்ணகமெனினும் ஒக்கும். அசையடியெனினும் அம்போதரங்கமெனினும் ஒக்கும்.

அராகவுறுப்பானது அளவடி முதல் எல்லா அடிகளாலும் நான்கடி முதல் எட்டடி யளவாக வரும்.

அம்போதரங்க வுறுப்பானது நாற்சீரடியாகிய ஈரடியால் இரண்டும், ஓரடியால் நான்கும், முச்சீரடியால் எட்டும், இருசீரடியாற் பதினாறுமாக வரும். சிறுபான்மை முச்சீரடி நான்கும், இருசீரடி எட்டுமாகவும் வரும்.

உ-ம். "தோல்லுலகம் படுசுடிகைச் சுடர்மணி விளக்கேந்தும்
பல்பொறிய படவரவு மடுபுலியும் பணிசெய்ய
வந்தாதுந் துபிமுழங்க வமரர்மலர் மழைசிந்த
விந்திரனு மலரவனுங் கரியவனு மேத்தெடுப்பச்
சூடகத் தளிர்ச்செங்கைத் துணைவி துணைக் கண்களிப்ப
வாடகத் திருமன்றத் தனவரத நடஞ்செய்வோய்."

இஃது ஆறடித் தரவு.

மூன்மலையுங் கொலைமடங்க வீருரியு மும்மதத்த
வன்மலையுங் கடமலையின் முடையுடலின் வன்றோலும்
பொன்மலையின் வெண்முகிலுங் கருமுகிலும் போர்த்தென்ன
வின்மலையும் புயமலையின் புறமலைய விசித்தனையே.

கடநாக மெட்டும்விடங் காணுக மோரெட்டுந்
தடநாக மவையெட்டுந் தரித்துளபூந் துகிலொன்று
முடனாக வடல்புரியுங் கொடுவரியி னுடுப்பொன்று
மடனாக வரவல்குற் கணிகலையா வசைத்தனையே.

வருநீலப் புயன்மலர மலரிதழிக் கண்ணியையு
மருநீல முயற்களங்க மகன்றமதிக் கண்ணியையுங்
கருநீலக் கண்ணியுமை செங்கைவரு கங்கையெனுந்
திருநீலக் கண்ணியையுஞ் செஞ்சடைமேற் செறித்தனையே.

இவை மூன்றும் நான்கடித்தாழிசை.

கறைவிட முகவெரி கனல்விழி யொடுமிளிர்
பிறையெயி றொடுமிடல் பெறுபக டொடுமட
லெறுழ்வலி யொடுமுரு மிடியென வருமொரு
மறலிய துயிர்தொள மலர்தரு கழலினை.

இலவிதழ் மதிநுத லிரதியோ டிரதம
துலைவற நடவிடு மொருவனும் வெருவர
வலைகட ணெடுமுர சதிர்தர வெதிர்தரு
சிலைமத னனையடல் செயுநுதல் விழியினை.

உலகமொ டுயிர்களு முலைதர வலம்வரு
மலர்மகள் கொழுநனு மகபதி முதலிய
புலவரு மடிகளொர் புகலென முறையிட
வலைகடல் விடமுண மமுதுசெய் தருளினை.

விசையிலெம் மிறைவியும் வெருவர விரசத
வசலம தசைதர வடல்புரி தசமுக
நிசிசரன் மணிமுடி நெறுநெறு நெறுவென
வசையில்பொன் மலரடி மணிவிர னிறுவினை.

இவை நான்கும் அராகம்.

அருவமு முருவமு மாகி நின்றமவ்
வருவமு முருவமு மகன்று நின்றனை.

சோல்லொடு பொருளுமாய்த் தோன்றி நின்றமச்
சொல்லையும் பொருளையுந் துறந்து நின்றனை.

இவை யிரண்டும் நாற்சீரீரடி யம்போதரங்கம். (பேரெண்)

அந்நலம் விழைந்தவர்க் கறமு மாயினை.
பொன்னலம் விழைந்தவர் பொருளு மாயினை.
இன்னலம் விழைந்தவர்க் கின்பு மாயினை.
மெய்ந்நலம் விழைந்தவர் வீடு மாயினை.

இவை நான்கும் நாற்சீர் ஓரடி யம்போதரங்கம். (அளவெண்)

முத்தொழிலின் வினைமுத னீ.
மூவர்க்கு முழுமுத னீ.
எத்தொழிலு மிறந்தோய் நீ.
இறவாத தொழிலினை நீ.
இருவிசும்பின் மேயோய் நீ.
எழின்மலரின் மிசையோய் நீ.
அரவணையிற் றுயின்றோய் நீ.
ஆலின்கீ ழமர்ந்தோய் நீ.

இவை எட்டும் முச்சீர் ஓரடி யம்போதரங்கம். (இடையெண்)

பெரியை நீ. சிறியை நீ. பெண்ணு நீ. ஆணு நீ.
அரியை நீ. எளியை நீ. அறமு நீ. மறமு நீ.
விண்ணு நீ. மண்ணு நீ. வித்து நீ. விளைவு நீ.
பண்ணு நீ. பயனு நீ. பகையு நீ. உறவு நீ.

இவை பதினாறும் இருசீர் ஓரடி யம்போதரங்கம். (சிற்றெண்).

என வாங்கு.

இது தனிச்சொல்.

கற்பனை கழன்றநின் பொற்கழ லிறைஞ்சுதும்
வெண்மதிக் கடவுண் மீமிசைத் தவழ்தரத்
தண்முகிற் குலங்க டாழ்வுறப் படிதலிற்
செங்கா லன்னமும் வெண்மருப் பேனமுங்
கீழ்மே றுருவ வாரழற் பிழம்பாய்
நின்றநின் றன்மையை யுணர்த்தும்
பொன்றிகழ் புலியூர் மன்றுகிழ வோனே." (53)

இது ஏழடி நேரிசை யாசிரியச் சுரிதகம்.

இவ்வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவினுள் தரவு முதலிய ஆறு உறுப்புங் குறைவின்றி வந்தன.

(2) அம்போதரங்க வொத்தாழிசை.

அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா மேற் சொல்லப்பட்ட தாழிசை முதலிய ஆறனுள் அராகமொழிந்த ஐந்து உறுப்பையுங் கொண்டுவரும். இதற்குதாரணம் மேற் காட்டிய வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவினுள் அராக மொழித்துக் காண்க.

(3) நேரிசையொத்தாழிசை.

நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா தரவு முதலிய ஆறனுள்.அராகம் - அம்போதரங்க மொழிந்த நான்குறுப்பை

யுங் கொண்டுவரும். இதற்குதாரணம் மேற்காட்டிய வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவினுள் அராகத்தையும் அம்போதரங்கத்தையு மொழித்துக் காண்க.

2. வெண்கலிப்பா.

54. வெண்கலிப்பா எத்தனை வகைப்படும்? எவ்வாறு வரும்?

வெண்கலிப்பாவும் - கலிவெண்பாவுமென இருவகைப் படும்.

(1) வெண்கலிப்பா.

அவற்றுள், வெண்கலிப்பா கலித்தளை விரவி ஈற்றடி முச்சீரான் முடியும்.

உ-ம். "தேல்செய்த மதர்வேற்கட் சிலைசெய்த சுடிகைநுதன்
மால்செய்த குழற்கோதை மகிழ்செய்ய நடஞ்செய்யுந்
தருணவிளம் பிறைக்கண்ணித் தாழ்சடையெம் பெருமானின்
கருணைபொழி திருநோக்கிற் கனியாத கன்னெஞ்சம்
வாமஞ்சான் மணிக்கொங்கைக் கொசிந்தொல்கு மருங்குலவர்
காமஞ்சால் கடைநோக்கிற் கரைந்துருகா நிற்குமா
லவ்வண்ண மாறிநிற்ப தகமென்று லகமகம்விட்
டெவ்வண்ண மாறிநிற்ப தின்று." (54)

(2) கலிவெண்பா.

கலிவெண்பா வெண்டளை தழுவி ஈற்றடி முச்சீரான் முடியும்.

உ-ம் "சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில்யா மாடு
மணற்சிற்றிற் காலிற் சிதையா வடர்ச்சியபொற்

கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நா
ளன்னையும் யானு மிருந்தேமா வில்லுளே
யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
யடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
யுண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
வன்னை யலறிப் படர்தரத் தன்னையா
னுண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்." (55)

3. கொச்சகக்கலிப்பா.

55. கொச்சகக்கலிப்பா எத்தனை வகைப்படும்? எவ்வாறு வரும்?

தரவு கொச்சகக்கலிப்பா, தரவிணைக் கொச்சகக்கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா என ஐந்து வகைப்படும்.

(1) தரவு கோச்சகம்.

அவற்றுள், தரவுகொச்சகக்கலிப்பா தரவு ஒன்றுபெற்று வருவதாம்.

உ-ம்: "அஞ்சம் போனடை.........நெஞ்சே" (5)

இது இவ்வாறு தனித்து வருதலன்றித் தனிச்சொல் லுஞ் சுரிதகமும் பெற்று வருதலுமுண்டு.

(2) தரவிணைக் கொச்சகம்.

தரவிணைக் கொச்சகக்கலிப்பா இரண்டு தரவைக் கொண்டு வருவதாம்.

உ-ம். "வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனுங்
கொடிபடு வரைமார்பிற் கூடலார் கோமானே."

இது தரவு.

என வாங்கு.

இது தனிச்சொல்.

துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் தொடர்புண்டாங்
கிணைமலர்த்தா ளருளுமே லிதுவிதற்கோ மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரே.

இது தரவு.

அதனால்.

இது தனிச்சொல்.

செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றுங்கொலிஃ தெண்ணிய வாறே." (56)

இது சுரிதகம்.

இது இடையிடையே தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் முடிந்தது.

(3) சிஃறாழிசைக் கொச்சகம்.

சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா சில தாழிசைகளோடு பிறவுறுப்புக்களையுங் கொண்டுவரும்.

உ-ம் "பருஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்
[தோன்றிக்
குருஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடை
[சூழ
படைப்பரிமான் றேரினோடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே.

இது தரவு.

ஆங்கொருசார்

உச்சியார்க் கிறைவனை யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனைப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே.

ஆங்கொருசார்

அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
சக்கிரனை வடிவழித்த மாயவனைப் பாவித்தார்
சக்கிரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே.

ஆங்கொருசார்

மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனைப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே.

இவை மூன்றுந் தாழிசை.

அஃதான்று

இது தனிச்சொல்.

கோடித்தேர்த் தோன்றல் கொற்கைக் கோமா
னின்புக ழொருவன் செம்பூட் சேஎ
யென்றுநனி யறிந்தனர் பலரே தானு
மைவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே."

இது சுரிதகம்.

இது தனிச்சொல் இடையிடைபெற்று ஒரு தரவும் மூன்று தாழிசையுஞ் சுரிதகமுங்கொண்டு நேரிசையொத் தாழிசைக்கலியிற் சிறிது வேறுபட்டு வந்தது.

(4) பஃறாழிசைக் கோச்சகம்.

பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா பல தாழிசைகளோடு மற்ற உறுப்புக்களையுங் கொண்டுவரும்.

உ-ம். "தண்மதியேர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடனிறையு முடன்றளரா முன்னாட்கட்
கண்மதியொப் பிவையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ.

இது தரவு.

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பற் றாழ்குழ றளர்வாளோ.

தகைநல மிவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் லிருப்பாளோ.

அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசோடு மடிவாளோ.

நாம்பிரியே மினியென்று நறுநுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோ மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ.

குன்றளித்த திரடோளாய் கொய்புனத்திற் கூடியநாள்
அன்றளித்த வருண்மொழியா லருளுவது மருளாமோ.

சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபாவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ.

இவை ஆறுந் தாழிசை.

எனவாங்கு

இது தனிச்சொல்.

அரும்பெற லிவளினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற லரியன வெறுக்கையு மற்றே.
அதனால், விழுமிய தறிமதி வாழி
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே.

இது சுரிதகம்.

இது நாலடித்தரவும், இரண்டடித் தாழிசை ஆறும், தனிச்சொல்லும், நான்கடிச் சுரிதகமும் பெற்றுவந்த பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

(5) மயங்கிசைக் கொச்சகம்.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும்

ஆறு உறுப்பும் மிக்கும் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் பலவாறு மயங்கிவரும்.

உ-ம். "மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கட லுங் கான லுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொய்ப்பறைய சிறையன்னம்
இரைநயந் திரைகூரு மேமஞ்சா றுறைவகேள்.

மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கனலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுந்நீர் பரந்தொழுகு மேமஞ்சா றுறைவகேள்.

இவை யிரண்டுந் தாவு.

கோடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோன்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால்.

கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைய சிறுபுறத்தோ
டெண்பனிநீ ருகக்கண்டுந் திரியலனே யென்றியால்.

நீர்பூத்த நிரையிதழ்க்க ணின்றுசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்.

கனைகுரல்யாற் றிருகரைபோற் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யென்றியால்.

வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கலாத்
தாழுமென் னிலைகண்டுந் தாங்கலனே யென்றியால்.

கலங்கவிழ்த்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்.

இவை ஆறுந் தாழிசை.

அதனால்

இது தனிச்சொல்.

அடும்பயி லிறும்பி னெடும்பணை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு.
செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்.

அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைவரு திரையொடு கரைபொருங் கடல்.
அலங்கொளி யவிர்சுட ரிலங்கொளி மலர்தொறுங்
கலந்தெறி காலொடு புலம்பின பொழில்.

இவை நான்கும் அராகம்.

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் சேண்மையு நிறப்பாயோ.

ஒல்லாது கழலுமென் னொளிவளையுஞ் செறிப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறப்பாயோ.

தாங்காது கழலுமென் றகைவளையுந் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறப்பாயோ.

மறவாத வன்பினேன் மனனிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.

காதலார் மார்பின்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்.

இணைபிரிந்தார் மார்பின்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.

இவை ஆறுந் தாழிசை.

எனவாங்கு

இது தனிச்சொல்.

பகைபோன் றதுதுறை பரிவாயின குறி
நகையிழந் ததுமுகம் நணிநாணிற் றுளம்
தகையிழந் தனதோள் தலைசிறந்தது துயர்
புகைபரந் ததுமெய் பொறையாயிற் றென்னுயிர்.

இவை இருசீர் ஓரடி யெட்டம்போதரங்கம்.

அதனால்

இது தனிச்சொல்.

இனையது நினையால் அனையது பொழுதால்
நினையல் வாழி தோழி தொலையாப்
பனியொடு கழிக வுண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே.''

இது சுரிதகம்.

இது தாவிரண்டும் தாழிசையாறும் தனிச்சொல்லும் அராகம் நான்கும் பெயர்த்தும் ஆறுதாழிசையும் தனிச் சொல்லும் இருசீரோரடியெட் டம்போதரங்க வுறுப்பும் பெற்று நான்கடி யாசிரியச் சுரிதகத்தாலிற்றுக் கலிக்கோ தப்பட்ட ஆறுறுப்பும் மிக்கும் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் மயங்கியும் வந்தமையான் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

56. மேற்சொல்லப்பட்ட கலிப்பாவிற்கு உறுப்பாக வருந் தரவு தாழிசைகளுக்கு அடிவரையறை யாதோவென்னை?

வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாக்களுக்குத் தரவு ஆறடியால்வரும். மற்றைக் கலிப்பாக்களுக்குத் தரவு மூன்றடி முதலிய பல அடிகளால் வரும்.

தாழிசை யொன்றற்கு அடி இரண்டேனும் மூன்றே னும் நான்கேனும் வரும்.

கலிப்பாவினம்.

1. கலித்தாழிசை.

57. கலிப்பாவினம் மூன்றனுட் கலித்தாழிசை எவ் வாறு வரும்?

இரண்டுமுதலிய பல அடிகளால் ஈற்றடிமிக்கு ஏனையடி தம்முள் அளவொத்து நிற்பத் தனித்தேனும் ஒருபொருள் மேல் மூன்றடுக்கியேனும் வரும்.

உ-ம். "இருகூற் றருவத் திருந்தண் பொழிற்றில்லை
யொருகூற்றின் கூத்தை யுணராய் மடநெஞ்சே
யொருகூற்றின் கூத்தை யுணரா யெனின்மற்றப்
பொருகூற்றந் தோற்றப் புலம்பேல் வாழி மடநெஞ்சே."

இது ஈற்றடி மிகுந்து தனித்துவந்த நான்கடிக் கலித் தாழிசை.

"பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே."

எனச் சிறுபான்மை ஏனையடிகள் ஒவ்வாது வருதலுமுண்டு.

"செல்லார் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்தெங்கள்
பொல்லா மணியைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

முத்தேவர் தேவை முகிலூர்தி முன்னுன
புத்தேளிர் போலப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

ஆங்கற் பகக்கன் றளித்தருளுந் தில்லைவனப்
பூங்கற் பகத்தைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்."

இது ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி ஈற்றடி மிக்கு வந்த கலித்தாழிசை.

2. கலித்துறை.

58. கலித்துறை எவ்வாறு வரும்?

ஐஞ்சீரடி நான்கினைக் கொண்டுவரும்.

உ-ம். "யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
றேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே."

3. கலிவிருத்தம்.

59. கலிவிருத்தம் எவ்வாறு வரும்?

நாற்சீரடி நான்கினைக் கொண்டுவரும்.

உ-ம். "வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலி
னுய்தலி னெஞ்சுட ராழியி னுன்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னன்முன்
னீதலை சென்றுரை நீள்கடை காப்போய்."

என வரும்.

60. மேற்சொல்லப்பட்ட கலிப்பாவினுங் கலித்துறையினும் வேறுபட்டுவருங் கலிப்பாவுங் கலித்துறையுமுளவோ?

உளவாம். அவை கட்டளைக்கலிப்பாவுங் கட்டளைக்கலித்துறையுமெனப் பெயர்பெறும்.

4. கட்டளைக் கலிப்பா.

இது முதற்கண் மாச்சீர்பெற்று நாற்சீரான் வருவது அரையடியாகவும், அஃது இரட்டி கொண்டது ஓரடியாகவும், அவ்வடி நான்கு கொண்டு வரும். அரையடிக் கெழுத்து முதலசை நேராயிற் பதினொன்றும், நிரையாயிற் பன்னிரண்டுமாம்.

உ-ம். "சொல்லி னீரிவ ளாசைப்பட் டாரென்று
சொன்ன சொற்பொருள் வேறுகொண் டையையோ
புல்லு வாரெவ் விதத்தினு மென்றுளம்
பூரித் தேயிருந் தேன்மட மங்கைமீர்
செல்லு லாம்பொழிற் கூவ நகருறை
திருவிற் கோல ரினுமரு ளாமையா
லல்ல தேது திகம்பர ரென்பொரு
ளறையின் வன்கண்ண ராவரென் மட்டுமே."

5. கட்டளைக் கலித்துறை.

இது முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாமனிற்பக் கடையொருசீரும் விளங்காயாகி வரும் ஐஞ்சீரடி நான்கு கொண்டு வரும்.

அது விளங்காயாய் வருவதன்றிச் சிறுபான்மை வேறுபட்டும் வரும்.

ஓரடிக் கெழுத்து முதலசை நேராயிற் பதினாறும் நிரையாயிற் பதினேழுமாம்.

உ-ம். "சிலைமலி வாணுத லெங்கைய தாக மெனச்செழும்பூண்
மலைமலி மார்பி னுதைப்பத்தக் தான்றலை மன்னர்தில்லை
யுலைமலி வேற்படை யூரனிற் கள்வரில் லென்னவுன்னிக்
கலைமலி காரிகை கண்முத்த மாலை கலுழ்ந்தனவே."

என வரும்.

வஞ்சிப்பா.

16. வஞ்சிப்பாவின் இலக்கணம் யாது?

பெரும்பாலுந் தன்தளையுஞ் சிறுபான்மை பிறதளையுந் தழுவி இருசீரடியாலேனும் முச்சீரடியாலேனும் மூன்றுமுதலிய பல அடிகளைக்கொண்டு தனிச்சொற் பெற்று அகவற்சுரிதகத்தான் முடிவதாம்.

1. குறளடி வஞ்சிப்பா.

உ-ம். "பூந்தாமரைப் போதமலரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவு
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்
மகிழ மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே."

2 சிந்தடி வஞ்சிப்பா.

உ-ம். "எறிவெண்டிரைக் கடல் சூழ்புவி யெளிதெய்தினு
மிறவந்துடைப் பொழுதய்ந்திட லுளதென்னினு
மறிவினறிறத் துயர்ந்தோர்படி றிசைகின்றிலர்
அதனல்
முன்வரு மின்பினு முறைப்பட நாடிற்
பின்வரு மிடர்மிகப் பெரிதா மெனவே."

வஞ்சியினம்.

1. வஞ்சித்தாழிசை.

62. வஞ்சியினம் மூன்றனுள் வஞ்சித்தாழிசை எவ்வாறு வரும்?

இருசீரடி நான்கு கொண்டது ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வரும்.

உ-ம். "பிணியென்று பெயராமே
துணிநின்று தவஞ்செய்வீ
ரணிமன்ற லுமைபாகன்
மணிமன்று பணியீரே.

என்னென்று பெயராமே
கன்னின்று தவஞ்செய்வீர்
நன்மன்ற லுமைபாகன்
பொன்மன்று பணியீரே.

அரிதென்று பெயராமே
வரைநின்று தவஞ்செய்வீ

ருருமன்ற லுமைபாகன்
திருமன்று பணியீரே."

2. வஞ்சித்துறை.

63. வஞ்சித்துறை எவ்வாறு வரும்?

இருசீரடி நான்கு கொண்டு வரும்.

உ-ம். "போரி வன்னன்
சார விருந்த
ஊரினு மில்லென்
றூர விகழ்ந்தே."

3. வஞ்சிவிருத்தம்.

64. வஞ்சிவிருத்தம் எவ்வாறு வரும்?

முச்சீரடி நான்கு கொண்டுவரும்.

உ-ம். "சார்ந்த ஞேதிய தாழ்மொழி
காய்ந்த வேலிரு காதிலும்
போந்த போன்று புகுந்திட
மாந்த ராகுல மன்னினர்."

மருட்பா.

65. மருட்பா எவ்வாறு வரும்?

மருட்பா, புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉவென்னும் நான்கு பொருள் மேலும் வெண்பா முதலாக ஆசிரியப்பா ஈறாக வருவனவாம்.